ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/49 - 2021 දෙසැම්බර් මස 29 වැනි බදාදා - 2021.12.29

2260/49 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு குருநாகல் வடக்கு நகர நீர் வழங்கல் திட்டத்தின், கஹட்டபிட்டிய (ரணவன) நீர்க் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டுகள் தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையை எடுத்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/03/KG/337.
நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 20.



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 723, ரணவன வசம கிராம அலுவலர் பிரிவில், ரணவன கிராமத்திலமைந்த அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஆர். டீ. எம். பீ. ஆர். ராஜபக்ஷ அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 70/2015 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இன் பகுதி மற்றும் இலக்கம் 75/2015 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இனால் குறிப்பிடப்படும் "நெலும்பத் வெவ" எனும் காணியில் முழு அளவில் சுமார் 40 பர்ச்சஸ் அளவிலான கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள்.

| | | |
|---|---|---|
| வரைபட இலக்கம் | : | 70/2015 |
| காணித்துண்டு இலக்கம் | : | 01 இன் பகுதி; |
| விஸ்தீரணம் | : | 22 பர்ச்சஸ். |

*காணியின் எல்லைகள் :*

வடக்கு: இந்தக் காணியின் எஞ்சிய பகுதி;

கிழக்கு: பிரதான வரைபட இலக்கம் கு 2079 இன் காணித்துண்டு இலக்கம் 01;

தெற்கு: அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. சில்வா அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1922 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு எழுத்து E;

மேற்கு: குருநாகல் - தம்புள்ளை இலிருந்து வெல்லவ வரையிலான வீதி (பிரதேச சபை).

| | | |
|---|---|---|
| வரைபட இலக்கம் | : | 70/2015 |
| காணித்துண்டு இலக்கம் | : | 01; |
| விஸ்தீரணம் | : | 18 பர்ச்சஸ். |

*காணியின் எல்லைகள் :*

வடக்கு: அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜீ. ஏ. சில்வா அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 1922 இற்கு உரிய வரைபடத்தின் காணித்துண்டு எழுத்து D;

கிழக்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி;

தெற்கு: பிரதான வரைபட இலக்கம் கு 2079 இன் காணித்துண்டு இலக்கம் 01;

மேற்கு: குருநாகல் - தம்புள்ளை இலிருந்து வெல்லவ வரையிலான வீதி (பிரதேச சபை).

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்:

01. திரு. ஆர். ஏ. எம். விஜேசிங்க,
    ரணவன,
    தோரயாய.

EOG 12 - 0322

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.